# M3 சுயமாக செயற்பயிற்சித் துணைக் கருவிகளை உருவாக்குதல்

## 3.1

### சரிபார்க்கக் கூடியவாறு சுயமாகப் பயிற்சித் தாள்களை எழுதுதல்.




இந்த அணுகுமுறை பிறமொழிச் சொற்பயிற்சிக்கும், பெருக்கல் வாய்பாட்டுக்கும், உண்மையறிவுக்கும் (ஆண்டுகள், இடங்கள்/நாடுகள் போன்றன) சரியான முறையில் எழுதுதல் பயிற்சிக்கும் பொருத்தமானது

செயற்படும் முறை: ஒரு தாளை எடுத்து நடுவில் செங்குத்தாகக் கோடிட்டு அல்லது நடுப்பகுதியில் மடிக்கவும்.

இடப்பக்கம் வினாக்களையும் வலப்பக்கத்தில் விடைகளையும் எழுதுக (எ.கா. இடது பக்கம் "der Apfel" வலது பக்கம் "அப்பிள்" அல்லது இடது பக்கம் 7x9 வலது பக்கம் 63 அல்லது இடது பக்கம் "மலேசியாவின் தலைநகர்" வலது பக்கம் "கோலாலம்பூர்" என எழுதி முடிந்த பின்னர், இரண்டாவது தாள் ஒன்றை எடுத்து தேர்வுத் தாளின் வலதுபக்கத்தை மறைக்கவும். இதனால் நீங்கள் வினாக்களை மட்டுமே பார்க்கலாம். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கவும். ஒவ்வொரு தடவையும் சரியான மறுமொழி கொடுக்கப்பட்டுள்ளதா? எனச் சரிபார்க்கவும். பிழையான விடைக்குப் புள்ளடி இடவும், இதனால் பின்னர் அவ்வினாக்களை மட்டுமே பயிற்சிசெய்யலாம்.

**குறிப்பு:**

இதனை நீங்கள் இருவர் சேர்ந்து செய்தால் (ஒருவருக்கு ஒரு தாள் வீதம்), உங்களுக்கு இரண்டு மடங்கு பயிற்சித் துணைக்கருவிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

## 3.2

### ஒலிப்பதிவுக் கருவியுடன் உங்கள் பயிற்சித் திட்டத்தை உருவாக்கவும்

சொல்வதெழுதுதல் ஏற்பாடு செய்வதற்கும், பிறமொழிச் சொற்களைக் கற்றுக்கொள்ளவும், அத்துடன் நாள்கள், இடங்கள், எண்கள் அல்லது பெருக்கல் வாய்ப்பாட்டை பயிற்சி செய்வதற்கும் இது பொருத்தமாகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் அமையும்.

ஒரு MP3 கருவி, கைப்பேசிகள், திறன் கைப்பேசிகள், கணினி அல்லது வேறு ஒலிப்பதிவுக் கருவிகளால் ஒலிகளைப் பதிவு செய்யவும்.

செயற்படும் முறை:

- சொல்வதெழுதுதல் பந்தியை, சொற்கள் அல்லது வினாக்களை (தெளிவாகப் பேசவும்!) பதிவுசெய்யவும். சீரான நீண்ட இடைவெளி விடவும். இந்த இடைவேளைகளின்போது, நீங்கள் வினாக்களுக்கு வாய்மொழியாக அல்லது எழுத்தில் விடையளிக்கலாம். சொல்வதெழுதுதல் பந்தியில் ஒவ்வொரு சொல்லுக்குப் பின் இடைவெளி விடவும். (அல்லது இரண்டு தொடக்கம் மூன்றுக்குப் பின்) பிறமொழிச் சொற்களாயின், முதலில் உங்கள் மொழியில் அல்லது பள்ளிமொழியில் சொல்லை ஒலிக்கவும். அதன்பின் ஒரு இடைவெளி விடவும்.



- இரு நிகழ்தகுவாய்ப்புகள் உள்ளன:
  விடைகள் உள்ள ஒரு பக்கத்தினை நீங்கள் உருவாக்கலாம் (சரியான வரிசையில்). ஒலிப்பதிவில் இடம்பெறும் இடைவெளிகளின்போது விடைகளை ஒலித்து, பின் உங்களுடைய விடைகளைத் தானே சரிபார்க்க விடைப் பக்கத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மறைத்து வைத்துப் பார்க்கலாம்.

  அல்லது

- நீங்கள் மேற்குறித்தபடி பதிவுகளைச் செய்யலாம். எனினும், ஒவ்வொரு இடைவேளைக்குப் பின்னும் சரியான விடையைப் பதிவுசெய்யுங்கள். ஆங்கிலச் சொற்களுக்கு எடுத்துக்காட்டு: "der Apfel" இடைவெளி – "the apple". இம்முறை சொற்கள் போன்றவற்றுக்கு பொருந்தும். ஆனால் சொல்வதெழுதுதல் ஆயத்தத்திற்கு உரியதல்ல.